என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த அரசும் உண்மையை மறைக்காமல் இந்த நாட்டுக்கு வரலாறுகளை எடுத்துச் சொல்லும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேதாரண்யம்—தஞ்சாவூர் சாலை.

*வினா எண் 421—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வேதாரண்யத்திலிருந்து திருத்துறைப்பூண்டி வழியாக தஞ்சாவூர் செல்லும் சாலையை சீரமைத்து இரு வழிப்பாதையாக மாற்ற திட்டமுண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இல்லை.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எங்களுடைய தொகுதியில் உற்பத்தியாகும் புகையிலை, சவுக்கு, விறகு, உப்பு போன்ற பொருட்கள் இந்தப் பாதையின் மூலமாகத்தான் திருச்சி, சென்னை போன்ற இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆகவே அந்தப் பகுதி வழியாக அதிகமான அளவிலே லாரிப் போக்குவரத்து இருக்கிறது. ஆனால் தற்போது அந்தப் பாதை வழியாகப் பேருந்துகள் கூடச் செல்ல முடியாத அளவில் செப்பனிடப்படாத நிலையிலே உள்ளது. ஆகவே அந்தப் பாதையை இந்த ஆண்டு செப்பனிடவில்லை என்றாலும் அடுத்த ஆண்டிலேயாவது செப்பனிட்டு நல்லமுறையில் அமைத்துத் தருவதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, வேதாரண்யத்தைப் பொறுத்தவரையில் 4 சாலைகள் இருக்கின்றன. அந்த நான்கு சாலைகளின் மொத்த நீளம் 99 கிலோ மீட்டர். அவைகள் அனைத்தும் தார் சாலைகளாக இருக்கின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருவழிப் பாதையாக ஆக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அப்படி இருவழிப் பாதையாக ஆக்க வேண்டும் என்றால் ஒரு கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இப்போது இருக்கின்ற நிலைமையில் அதனை உடனடியாக எடுத்துக் கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவரவர்களே, அந்தப் பாதை ஆற்றின் ஓரமாகச் செல்கின்றது. அப்படிச் செல்கின்ற பகுதிகளில் களிமண் பகுதியாக இருக்கக்கூடிய இடங்களில்,

பாதையின் ஓரங்கள் அமுங்கிவிடுவதால் எதிரே வருகின்ற வாகனங்களுக்கு வழிவிடுகின்ற வகையில் சற்று ஒதுங்க இயலவில்லை. ஆகவே அந்தப் பாதையினை அகலப்படுத்தி விட்டால், எதிரே வருகின்ற வாகனங்களுக்கு வழிவிட்டுச் செல்வதற்கு ஏதுவாக அமையும். ஆகவே அந்த வகையில் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, வரும் ஆண்டுகளில் மாநில சாலைகள் திட்டத்தின் கீழாக அது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதலிலே அமைச்சரவர்கள் பதிலளிக்கின்ற போது வேதாரண்யத்திலே உள்ள சாலைகள் நல்ல முறையில் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் மூதறிஞர் ராஜாஜி அவர்களும், சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களும் உப்பு சத்தியாக்கிரகம் செய்த இடத்தில் உள்ள நினைவுச் சின்னத்திற்கும் நகரத்திற்கும் இடையே உள்ள பாதை மிகவும் பாழடைந்திருப்பதாகவும் அதைச் சீரமைக்க வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குக் கோரிக்கை வந்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போடவும்.

திருவாடானை ஒன்றிய அலுவலகக் கட்டிடம்.

*வினா எண் 422—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடானையில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடானை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அரசு, அரசு ஆணை எண் 306-ன் கீழ் அனுமதி அளித்துள்ளது. அதனுடைய மதிப்பீடு 3,25,000 ரூபாய். நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS